செய்தி வெளியீடுஎண்.56/2016 நாள்:15.11.2016

## பழைய ரூபாய் 500/– மற்றும் 1000/– நோட்டுக்களை பயன்படுத்தி 24.11.2016ந்தேதி வரை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரியையும், கட்டணங்களையும் செலுத்தலாம்

- 24.11.2016ந்தேதி வரை பழைய ரூபாய் 500/– மற்றும் 1000/– நோட்டுகள் குடிநீர் மற்றும் கழிவு நீர் வரி/கட்டணமாக ஏற்றுக்கொள்ளப்படும்.
- குடிநீர் மற்றும் கழிவுநீர் வரியையும் / கட்டணங்களையும், சென்னைக் குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்திலும்/பகுதி அலுவலகங்களிலும் அல்லது பணிமனை வசூல் மையங்களிலும், பொது வசூல் மையங்கள் மற்றும் அரசு இ,சேவை மையங்களை உபயோகப்படுத்தியும் செலுத்தலாம்.
- வசூல் மையங்கள் தலைமை அலுவலகத்திலும்/பகுதி அலுவலகங்களிலும் அல்லது பணிமனை வசூல் மையங்களிலும், பொது வசூல் மையங்கள் மற்றும் அரசு இ,சேவை மையங்கள் பொது மக்களின் வசதிக்காக 19 நவம்பர் 2016 (சனிக்கிழமை) மற்றும் 20 நவம்பர் 2016 (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 முதல் மாலை 5.30 மணி வரை இயங்கும்.
- நிலுவை மற்றும் நடப்பு கட்டணங்களுக்கு மட்டும் பழைய நோட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும். பழைய ரூபாய் 500/– மற்றும் 1000/– நோட்டுகளை பயன்படுத்தி முன்பணமாக வரியையும் / கட்டணங்களையும் செலுத்த இயலாது.
- நுகர்வோர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தங்களின் நிலுவை மற்றும் நடப்புத்தொகையை செலுத்தி நேர் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்